கல்வி அமைச்சு
Ministry of Education

'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

எனது இல. My Ref. ED 3/37/01/133 உமது இல. Your Ref. திகதி Date 2020 சனவரி 01

சுற்றறிக்கை இல: 03/2020 ஆலோசனை மற்றும் வழிகாட்டல் இலக்கம் 01

அனைத்து: மாகாண கல்விச் செயலாளர்கள்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு

**பாடசாலை அமைப்பில் தற்போது அமுலிலுள்ள பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்துவதன் மூலம் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 ஆக உயர்த்தல்**

**மற்றும்**

**பரிபூரண மும்மொழி இடைநிலைத் தேசிய பாடசாலைகள் 20 ஐ மாவட்ட மட்டத்தில் தாபித்தல்**

**மற்றும்**

**அப் பாடசாலைகளை இணைத்துக் கேந்திரப் பாடசாலையுடன் கூடிய பாடசாலைகள் வலையமைப்பொன்றைத் (school network) தாபித்தல்.**

## 1.0 அறிமுகம்

அனைத்து பாடசாலை மாணவருக்கும் சம-நியாய கல்விப் பிரவேச வாய்ப்பை வழங்குவதும், பண்புத் தர கல்வி வாய்ப்பை வழங்குவதும் கல்வியின் முதன்மை இலக்கொன்றாகும். "சௌபாக்கியத்தின் எதிர்கால நோக்கு" அரசின் கொள்கையில் "பயனுறுதிமிக்க குடிமக்கள் மற்றும் மகிழ்வாக வாழும் குடும்பம்" எனும் தொனியின் கீழ் "பாடசாலைக் கல்வியின் நவோதயம்" செயற்றிட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைசார் முன்மொழிவுகளில் கல்வி தொடர்பான அரச பங்களிப்பு தெளிவாக வெளியிடப்பட்டுள்ளது.

நவீன கல்வி மறுசீரமைப்பின் கீழ் பாடசாலை அமைப்பை திறனாய்வு செய்யும் நிகழ்ச்சிக்குக் கீழ் குறிப்பிட்ட முதன்மை நிகழ்ச்சிகள் உள்ளடங்கும்.

- பாடசாலை அமைப்பில் தற்போது அமுலிலுள்ள பாடசாலைகளிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்துவதன் மூலம் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 ஆக உயர்த்தல்.
- அனைத்து மாவட்டங்களும் தழுவும் வகையில் பரிபூரண மும்மொழி இடைநிலைத் தேசிய பாடசாலைகள் 20 ஐ மாவட்ட மட்டத்தில் தாபித்தல்.
- மேற்கூறிய பாடசாலைகளை இணைத்துக் கேந்திரப் பாடசாலையொன்றுடன் கூடிய பாடசாலைகள் வலையமைப்பொன்றைத் (school network) தாபித்தல்.

## 2.0 இலக்குகள்

- இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைகள் உச்சளவில் உறுதிப்படுத்தப்படும் வகையில் அனைத்துப் பிள்ளைக்கும் சம-நியாய மற்றும் உயர் தரத்திலான கல்விப் பிரவேச மற்றும் பங்குபற்றல் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தல்.
- இடைநிலைக் கல்வி பாடத்திட்டங்களை அமுலபடுத்தும் பாடசாலைகளை, திறனாய்வு செய்வதன் மூலம் உச்சளவில் வளப் பயன்பாட்டை உத்தரவாதப்படுத்தல்.
- இவ்வேலைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்திச் செய்யப்படும் பாடசாலைகளுக்குள் இடம்பெறாத பாடசாலைகள் தொடர்பில் நிலைகுத்துச் சமநியாயக் (verticle equity) கொள்கை உறுதிப்படுத்தப்படும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தல்.
- மொத்த கல்விப் பண்புத் தரத்தை மேம்படுத்தல்.
- மாணவர் கற்றல் அடைவு மட்டத்தை (learning outcomes) மேம்படுத்தல்.

கௌரவ அமைச்சர் Hon. Minister +94112784832 +94112784825 education@moe.gov.lk
செயலாளர் Secretary +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk

3.0 எதிர்ப்பார்க்கப்படும் வருவிளைவுகள் (outputs) மற்றும் வெளியீடுகள் (outcomes)

(அ) எதிர்ப்பார்க்கப்படும் வருவிளைவுகள் (outputs):

- தற்போது அமுலிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 ஆக உயர்த்தல்.
- வேலைத்திட்டத்துக்காக தேர்ந்தெடுக்கும் பாடசாலைகளில் பௌதிக, உட்கட்டமைப்பபு மற்றும் மனித வள அபிவிருத்தி.
- அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் பரிபூரண மும்மொழி இடைநிலைத் தேசிய பாடசாலைகள் 20 ஐத் தாபித்தல்.
- மொத்த பாடசாலை அமைப்பும் இணைக்கப்படும் வகையில் கேந்திரப் பாடசாலையொன்றுடன் கூடிய வலையமைப்பொன்றைத் (school network) தாபித்தல்.

(ஆ) எதிர்ப்பார்க்கப்படும் வெளியீடுகள் (outcomes)

- எவ்வித வேறுபாடுகளுமின்றி அனைத்துப் பாடசாலைப் பிள்ளைக்கும் பண்புத்தர கல்விக்காக கல்விப் பிரவேச மற்றும் பங்கேற்பு வாய்ப்புகளை உறுதிப்படுத்தியிருத்தல்.
- தற்போது பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றுள்ள துவித முனைவாக்கம் (bi-polarization) இழிவளவாகியிருத்தல்.
- கல்வி அமைப்பில் தற்போதிருக்கும் வளப்பகிர்வு வேறுபாடுகள் இழிவளவாகியிருத்தல் மற்றும் கல்வி முதலீட்டின் விளைத்திறன் மேம்பட்டிருத்தல்.
- பண்புத்தர கல்வி வாய்ப்பை மொத்த அமைப்பும் உள்ளடங்கும் வகையில் வழங்க முடியுமாக இருத்தல்.
- சமநிலையான பிராந்திய அபிவிருத்தியொன்றை (balanced-regional development) நிலைபேறாக நடத்திச்செல்ல முடியுமாக இருத்தல்.
- கல்வியின் பண்புத்தரம் மேம்பட்டிருத்தல்.

4.0 வழிமுறை:

4.1 **பாடசாலை அமைப்பில் தற்போது அமுலிலுள்ள பாடசாலைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்துவதன் மூலம் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 ஆக உயர்த்தல்.**

இவ்வேலைத்திட்டம் கல்வித் திட்டமிடல் முறைமையின் கீழ் விஞ்ஞான கோட்பாடுகளின் அடிப்படையில் அமுல்படுத்தப்படும். பாடசாலைகளின் நியாயநிலையிறுத்த (school rationalization) மற்றும் பாடசாலைகளின் விவரணையாக்கப் (school mapping) பிரயோகங்களின் மூலம் அச்செயற்பாடு கீழ்வரும் படிமுறைகளுடாக அமுல்படுத்தப்படும்.

படிமுறை 1: கேந்திரப் பாடசாலைகள் மற்றும் அக்கேந்திரப் பாடசாலைகளுடன் இணைக்கப்படும் பாடசாலைகள் வலையமைப்பை (school network) இனங்காணல்.

படிமுறை 2: அபிவிருத்திக்காக பாடசாலைகள் வலையமைப்பின் தேர்ந்தெடுப்பை உறுதிப்படுத்தல்.

படிமுறை 3: பாடசாலைகளின் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல். (நீண்ட கால, நடுத்தர மற்றும் குறுகிய கால) மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.

படிமுறை 4: தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளை, முன்னுதாரண, வினைத்திறன்மிக்க, செலவு மற்றும் வள முகாமைத்துவ மையங்களாக(model, efficient, cost & resource management centers) அமுலப்படுத்தல

படிமுறை 5: கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பெறுபேற்று மதிப்பீடு (impact evaluation)

படிமுறை 1: கேந்திரப் பாடசாலைகள் மற்றும் அக்கேந்திரப் பாடசாலைகளுடன் இணைக்கப்படும் பாடசாலைகள் வலையமைப்பை **(school network)** இனங்காணல்.

கேந்திரப் பாடசாலைகள் மற்றும் அக்கேந்திரப் பாடசாலைகளுடன் இணைக்கப்படும் பாடசாலைகள் வலையமைப்பை (school network) இனங்காணல் பாடசாலை விவரணையாக்க(school mapping) தொழிநுட்ப முறைமையின் மூலம் அமுல்படுத்தப்படும். இங்கு கேந்திரப் பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்தல் இரு (2) கட்டங்களின் கீழால் இடம்பெறல் வேண்டும்:

கட்டம் 1: இங்கு தற்போதைக்கும் தேசிய பாடசாலையொன்றில்லாத பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முன்னுரிமையளிக்கப்படல் வேண்டும்.

கட்டம் 2: தற்போது தேசிய பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் கேந்திரப் பாடசாலைகளின் தேர்ந்தெடுப்பை மேற்கொள்ள வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் பாடசாலைகள் வலையமைப்புகளில் கேந்திரப் பாடசாலைகளைத் தேர்ந்தெடுக்கும் போது கீழ்வரும் காரணிகள்/நியமங்களின் பிரகாரம் தேர்ந்தெடுத்தல் செய்யப்பட வேண்டும்.

i. கல்விப் பிரவேச வாய்ப்புகள் மற்றும் பங்கேற்பு (access in and participation for education)
ii. மாணவர் நகர்வு(student flow)
iii. உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்கச் செயலாக்கம் (feasibility of expansion of of infrastructure facilities)
iv. கபொத உதர மாணவர் நகர்வு மற்றும் மாணவர் தொகை(GCE AL student flow and student population)
v. மும்மொழி மூலக் கற்றலுக்கான இயலுமை (possibility to trilingualism)
vi. சமூகப் – பொருளாதாரக் காரணிகள் (socio-economic fators)
vii. பாடசாலைகள் வலையமைப்பொன்றில் உள்ளடங்கும் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளின் மாணவர் தொகை (வகை 3 மற்றும் வகை 2) [(student population in primary and secondary schools in the school network) (Type 2 & Type 3)]
viii. பாடசாலைகள் வலையமைப்பொன்றில் இருக்க வேண்டிய பாடசாலைகளின் எண்ணிக்கை(number of schools per network)
ix. பிரதான கேந்திரப் பாடசாலையின் மாணவர்த் தொகை(school size of the core school in the network)
x. பிரதான கேந்திரப் பாடசாலைக்காக தற்போதைக்கும் மேற்கொண்டுள்ள அரச முதலீடு (எவ்விடயத்துக்காக/எத்தனை மில்லியன் ரூபாய் நிதி முதலீடு என்பன அடங்கலாக) (public investment for the core school of the network)

**i. கல்விப் பிரவேச வாய்ப்புகள் மற்றும் பங்கேற்பு (access in and participation for education)**

- அபிவிருத்திக்காக தேர்ந்தெடுக்கப்படும் கேந்திரப் பாடசாலைகளின் மாணவர் பிரவேசம் மற்றும் பங்கேற்பு தொடர்பில் உறுதிப்பாடொன்று இருக்க வேண்டும். கேந்திரப் பாடசாலைகளைத் தேர்ந்தெடுக்கும் போது மாணவர்களே முதன்மைக் காரணியாவர். எந்தப் பிள்ளையும் கற்றல் வாய்ப்பை இழக்கா வகையில் செயற்பட வேண்டும்.
- மாணவர்களுக்கு எவ்வித புவியியல், சமூகப் - பொருளாதார மற்றும் ஏனைய எவ்விதச் சார்புப் போக்கும் இடம்பெறா வகையில் அனைத்துப் பிள்ளைக்கும் கல்விக்காகவுள்ள உரிமை உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**ii.** மாணவர் நகர்வு **(student flow)**

- கடந்த 5 வருட காலத்துக்குள் பாடசாலைகள் வலையமைப்பினுள் அவ் ஒவ்வொரு பாடசாலைக்குமுள்ள மாணவர் கேள்வி பகுப்பாய்வுச் செய்யப்பட வேண்டும். அப்பகுப்பாய்வு பாடசாலைகள் அடிப்படையில், வகுப்புகள் அடிப்படையில், மற்றும் கலைத்திட்ட அடிப்படையில் செய்யப்படல் வேண்டும்.
- பாடசாலைகள் வலையமைப்பினுள் அவ் ஒவ்வொரு பாடசாலைக்குமான மாணவர் வருகையை கணக்கிடும் போது கிராம சேவகர் பிரிவுகளின் அடிப்படையில் அக்கணக்கீட்டை மேற்கொள்ள முடியும். அதற்காக கீழ்வரும் படிவங்களைப் பயன்படுத்த முடியும்.
    - படிவம் 1: Student flow by student information
    - படிவம் 2: Student flow by by grades
    - படிவம் 3a: Student flow by schools (number of students from each GN division
    - படிவம் 3b: Student flow by GN division (example)
    - படிவம் 4: Student flow by school and by grade
    - படிவம் 5: Format for submissiion of school list with structure proposals

**iii.** உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்க இயலுமை (feasibility of expansion of of infrastructure facilities)

- தேர்ந்தெடுக்கப்படும் கேந்திரப் பாடசாலையை, மேலதிக அபிவிருத்தி வசதிகள் அதாவது மொத்த பாடசாலை கற்றற் சூழலைக் கவர்ச்சிகரமான முறையில் மேம்படுத்துவதற்கு மற்றும் அதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய பௌதிக வசதிகளை வழங்குவதற்குப் போதுமான இடவசதிகள் இருக்க வேண்டும்.
- அப்பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூட வசதி, ஏனைய விடயார்ந்த உயர்த் தரத்திலான இடவசதி, விளையாட்டு வசதிகள் கற்றல் வசதிகளுக்கான இடவசதி, புறப்பாடவிதான செயற்பாடுகளுக்கான இடவசதி போன்ற வசதிகளுக்காக போதிய இடவசதி இருத்தல் வேண்டும்.
- தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் உத்தரவதமளிக்கப்பட்ட இடர்நேர்வு ஆபத்தற்ற இடமொன்றில் கேந்திரப் பாடசாலை அமையப்பெற்றிருத்தல் வேண்டும்.

**iv.** கபொத உதர மாணவர் நகர்வு மற்றும் மாணவர் தொகை **(GCE AL student flow and student population)**

- மிகவும் வரையறுக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்காக கபொத உதர பாடத்துறைகளை நடத்திச் செல்வதானது விளைத்திறனற்ற கல்வி வளப் பயன்பாடென அவதானிக்கப்பட்டுள்ளது. விசேடமாக கபொத உதர விஞ்ஞானக் பாடப் பிரிவொன்றுக்காக 5 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கை காணப்படினும், அப்பாடசாலைகளுக்கு அனைத்து வசதிகளையும் வழங்க நேர்ந்துள்ளது. அந் நிலைமை கற்றல் மற்றும் கற்பித்தல் வழிமுறையிலும் நேரடியாக தாக்கஞ் செலுத்தும். எனவே கபொத உதர பாடப் பிரிவுக்காக போதிய மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து கபொத உதர பாடப் பிரிவுகள் அமுல்படுத்தப்படும் பாடசாலைகள் திறனாய்வு செய்யப்படல் வேண்டும். (உதா. கபொத உதர: விஞ்ஞானப் பாடங்களைக் கொண்டப் பாடசாலைகள், அழகியற் பாடங்களைக் கொண்டப் பாடசாலைகள், தொழிநுட்பப் பாடங்களைக் கொண்டப் பாடசாலைகள், கலைப் பாடங்களைக் கொண்டப் பாடசாலைகள், வணிகப் பாடங்களைக் கொண்டப் பாடசாலைகள் என்னும் வகையில்)

v. மும்மொழி மூலக் கற்றலுக்கான இயலுமை **(possibility to trilingualism)**

- இவ் வேலைத்திட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் கேந்திரப் பாடசாலைகளில் மும்மொழி மூலக் கற்றலுக்கு அவசியமான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கான இயலுமை காணப்படல் வேண்டும்.

vi. சமூகப் - பொருளாதாரக் காரணிகள் **(socio-economic fators)**

- அவ் ஒவ்வொரு பிரதேசத்திலும் விரவியுள்ள விசேட சமூகப் - பொருளாதாரக் காரணிகள் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறான எத்தகைய விசேட நிலைமைகளாலும் எந்தவொரு பிள்ளைக்கும் கல்விக்கான தடையொன்று ஏற்படாதிருக்க வேண்டும்.

vii. பாடசாலை வலையமைப்பொன்றில் உள்ளடங்கும் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளின் மாணவர் தொகை (வகை 3 மற்றும் வகை 2) **[(student population in primary and secondary schools in the school network) (Type 2 & Type 3)]**

- மொத்த பாடசாலைகள் வலையமைப்புகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாடசாலைகளிலுள்ள மாணவர் தொகை 1000-3000 இற்கு இடைப்பட்டிருத்தல் போதியதாகும்.

viii. பாடசாலைகள் வலையமைப்பொன்றில் இருக்க வேண்டிய பாடசாலைகளின் எண்ணிக்கை **(number of schools per network)**

- பருமட்டாக ஒரு பாடசாலை வலையமைப்புக்காக இணைக்கப்படும் அங்கத்துவப் பாடசாலைகளின் அதிகப்பட்ச எண்ணிக்கை 5-8 இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- அனைத்துப் பாடசாலைகளும் ஏதேனுமொரு இணைப்புக்கு (பாடசாலை கேந்திரத்துக்கு) உள்வாங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- தனித்தமைந்ததாக இனங்காணப்படும் பாடசாலைகளும் ஏதேனுமொரு இணைப்புக்கு (பாடசாலை கேந்திரத்துக்கு) இணைக்கப்படுவதற்காக பெயரிடப்படவேண்டியதோடு, அப்பாடசாலை விசேடமானதென (தனித்தமைந்தமை) குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- தற்போதைக்கும் அபிவிருத்தியடைந்துள்ள அதிக மாணவர்த் தொகையைக் கொண்ட பாடசாலைகளும் உரிய இணைப்பில் (பாடசாலை கேந்திரத்தில்) அங்கத்துவப் பாடசாலையொன்றாகப் பெயரிடப்படல் வேண்டும்.

ix. பிரதான கேந்திரப் பாடசாலையின் மாணவர்த் தொகை **(school size of the core school in the network)**

- கேந்திரப் பாடசாலை 6-13 வகுப்புகளைக் கொண்ட இடைநிலைப் பாடசாலையொன்றாக காணப்படல் வேண்டும்.
- கேந்திரப் பாடசாலையில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச மாணவர் எண்ணிக்கை 750 ஆகக் காணப்படல் வேண்டும். அதிக மாணவர் தொகையொன்று ஒரு பாடசாலைக்கு இணைக்கப்படாத வகையில் மற்றும் பாடசாலைகள் வலையமைப்புக்குரிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு பிரதான கேந்திரப் பாடசாலைக்குப் பிரவேசிப்பதற்கான வசதிகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

x. பிரதான கேந்திரப் பாடசாலைக்காக தற்போதைக்கும் மேற்கொண்டுள்ள அரச முதலீடு (எவ்விடயத்துக்காக/எத்தனை மில்லியன் ரூபாய் நிதி முதலீடு என்பன அடங்கலாக) **(public investment for the core school of the network)**

- தேர்ந்தெடுக்கப்படும் கேந்திரப் பாடசாலைக்காக அரசால் கடந்த காலங்களில் பல்வேறு அரச மற்றும் அபிவிருத்திப் பங்காளர் நிறுவனங்கள் மற்றும் நிதி ஆதாரங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் பரிசீலிக்கப்படல் வேண்டும்.
- அம் முதலீடுகளின உச்சப் பயன்பாடு பெறப்படும் வகையில் செயற்படல் வேண்டும்.

பொதுக் குறிப்புகள்:

- மேற்கூறிய நியமங்களுக்கிணங்க அனைத்துப் பிரதேசச் செயலாளர் பிரிவுக்கும் மூன்று பாடசாலைகள் வீதம் இனங்காணப்படல் வேண்டும். விசேட நிலைமைகள் காணப்படின் அது தொடர்பில் நியாயநிலையிறுத்தப்படல் வேண்டும்.
- மாகாண பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்கள் (திட்டமிடல்) 2020 சனவரி மாத 15 ம் திகதியாகையில் தமது மாகாணத்தின் மேற்கூறிய அளவுகோள்களுக்கிணங்க இவ்வேலைத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பாடசாலைகள் மாகாணக் கல்வி அதிகாரிகளுடன் (மாகாண, வலய, கோட்ட) தீர்மானித்து கல்வி அமைச்சிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
- 2020 சனவரி மாதம் அனைத்து மாகாணக் கல்வி அதிகாரிகள் மற்றும் கல்வி அமைச்சின் உரிய அதிகாரிகளுடன் இவ் வேலைத்திட்டத்தின் கீழால் தேர்ந்தெடுக்கப்படும் பாடசாலைகள் தொடர்பில் கலந்துரையாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அப்போது பாடசாலைகளில் நடத்தப்படும் கபொத உதர பாடங்கள் தொடர்பில் கட்டமைக்கப்பட்ட முன்மொழிவுகளும் முன்வைக்கப்படல் வேண்டும்.

படிமுறை 2: அபிவிருத்திக்காக பாடசாலைகள் வலையமைப்புகளின் தேர்ந்தெடுப்பை உறுதிப்படுத்தல்

- அவ் ஒவ்வொரு மாகாணங்களாலும் முன்மொழியப்படும் பாடசாலைகள் தொடர்பில் மூன்றாம் தரப்பு நிறுவனமொன்றின் ஊடாக மாகாணத்தினால் மேற்கொள்ளப்படும் முன்மொழிவுகள் தொடர்பில் மதிப்பீட்டிற்குட்படுத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலையை அபிவிருத்தியுடனான அணுகுமுறையுடன் கூடியதொரு பாடசாலையாக இயலுமைக்குரிய பரிந்துரைப்பைப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

படிமுறை 3: பாடசாலைகளின் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல். (நீண்ட கால, நடுத்தர மற்றும் குறுகிய கால) அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்)

- இப்படிமுறையில் அனைத்துப் பாடசாலைகளினதும் மாற்றத் திட்டச் செயன்முறையின் கீழ் கீழ்வரும் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.
    - நடுத்தர அபிவிருத்தித் திட்டம் (2020-2025)
    - நடுத்தர அபிவிருத்தித் திட்ட அடிப்படையிலான வருடாந்தச் செயற்படுத்தத் திட்டம் (வருடாந்தம் தயாரிக்கப்படல் வேண்டும்).
- முன்மொழியப்படும் பாடசாலைகள் இணைப்பில் (பாடசாலைகள் வலையமைப்பு) உள்ளடங்காத பாடசாலைகளின் மாணவர்களுக்காக, நிலைக்குத்துச் சமநியாய (verticle equality) அடிப்படைகளுக்கமைவாக விசேட திட்டமொன்றைத் தயாரித்து அப்பாடசாலைகளை விசேட பாடசாலைகளாகக் கருதி பௌதிக, மனித மற்றும் ஏனைய வளங்களை வழங்கி அபிவிருத்திச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- செலவு விபரங்களடங்கிய பாடசாலை அபிவிருத்தித் திட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் இவ்வேலைத்திட்டம் அப்பாடசாலைகளில் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

குறிப்பு:

- திட்டத் தயாரிப்பு, செலவு விவரணம் மற்றும் வளத் தொகுப்பு (resource envelope) தொடர்பான விபரங்கள் எதிர்காலத்தில் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

படிமுறை 4: தேர்ந்தெடுக்கப்பட்ட கேந்திரப் பாடசாலைகளை முன்னுதாரண, விளைத்திறன்மிக்க, செலவு மற்றும் வள முகாமைத்துவ மையங்களாக **(model, efficient, cost & resource management centers)** அமுல்படுத்தல்.

- இப் பாடசாலைகளுக்காக பாடசாலை அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரித்து இப் பாடசாலைகளின் உண்மையான அவசியப்பாடுகளை முதன்மை அடிப்படையில் இனங்கண்டு பௌதிக, மனித மற்றும் ஏனைய வளங்களை வழங்கல் மற்றும் இவ் ஒவ்வொரு பாடசாலைக்குமான பாதீட்டு நிதி ஒதுக்கீட்டை தனியாக இனங்கண்டு அப் பாடசாலைகளை முன்னுதாரண, விளைத்திறன்மிக்க, செலவு மற்றும் வள முகாமைத்துவ மையங்களாக (model, efficient, cost & resource management centers) நடத்திச் செல்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

படிமுறை 5: கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பெறுபேற்று மதிப்பீடு **(impact evaluation)**

- இவ் வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்திச் செய்யப்படும் பாடசாலைகளில், விஞ்ஞான முறைமையொன்றின் கீழ் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.
- அவ்வாறே இவ் வேலைத்திட்டம் அமுல்படத்தப்பட்டதன் பின்னர் வருவிளைவு/பெறுபேறு (impact evaluation) தொடர்பில் கற்கை மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4.2 **அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் பரிபூரண மும்மொழி இடைநிலைத் தேசிய பாடசாலைகள் 20 ஐத் தாபித்தல்.**

- இங்கு கீழ்வரும் நியமங்களுக்கிணங்க முன்மொழியப்பட்ட பாடசாலைகளைத் தாபிப்பதற்குப் பொருத்தமான பிரதேசங்கள் இனங்காணப்படல் வேண்டும்.

1. அனைத்து மாவட்டங்களும் உள்ளடக்கப்படல்.
2. நவீன அபிவிருத்தி வலயங்கள், தேசிய அபிவிருத்தி நகரங்கள் மற்றும் உபநகரங்களுக்கு அண்மையில் விசேடமாக இப்பாடசாலைகளைத் தாபித்தல்.
3. அதிக மாணவர் கேள்வி அதிக போட்டித் தன்மைக் கொண்ட பிரதேசங்களில் இப்பாடசாலைகளைத் தாபித்தல்.
4. தாபிக்கப்படும் அனைத்துப் பாடசாலைகளும் 6-13 வகுப்புகளைக் கொண்ட இடைநிலைப் பாடசாலைகளாக இருப்பதோடு கலவன், மும்மொழி பாடசாலைகளாகத் தொழிற்படல்.
5. கபொத உதர அனைத்துப் பாடங்களையும் நடத்திச் செல்லல்.
6. இப்பாடசாலைகளுக்கு அவசியமான அனைத்து பௌதிக உட்கட்டமைப்பு மற்றும் மனித வளங்களை வழங்க வேண்டியுள்ளதோடு, அனைத்துப் பாடசாலைகளுக்குமான அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரித்து அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு அப் பாடசாலைகளை முன்னுதாரண, விளைத்திறன்மிக்க, செலவு மற்றும் வள முகாமைத்துவ மையங்களாக (model, efficient, cost & resource management centers) அமுல்படுத்தல்.
7. மாணவர் மற்றும் ஆசிரியர் புத்தாக்க மத்திய நிலையங்களாக இப் பாடசாலைகளை அபிவிருத்திச் செய்தல்.

குறிப்பு:

- இப் பாடசாலைகளைத் தாபிப்பது தொடர்பில் மேலதிக ஆலோசனைகள் எதிர்காலத்தில் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4.3 மேற்கூறிய இரு பாடசாலை வகைகளையும் இணைத்து அனைத்துப் பாடசாலைகளும் உள்ளடங்கும் வகையில் கேந்திரப் பாடசாலையுடன் கூடிய பாடசாலைகள் வலையமைப்பொன்றைத் தாபித்தல்

- இவ் வலையமைப்புகளைத் தாபிக்கும் போது கீழ்வரும் காரணிகள் தொடர்பில் கற்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
    - முன்மொழியப்பட்ட பாடசாலைகள் வலையமைப்பினுள் பௌதிக மற்றும் மனித வளப் பரிமாற்றம்.
    - பாடசாலைகள் வலையமைப்புக்கமைவான ஆசிரியர் நியமனம்.
    - அனைத்துப் பாடசாலைகளும் ஏதேனுமொரு பாடசாலைகள் வலையமைப்புக்குள் உள்ளடங்கல்.
    - தனித்தமைந்த பாடசாலைகளும் பாடசாலைகள் வலையமைப்பொன்றுக்குள் உள்ளடங்கல்.
    - அனைத்துப் பாடசாலைகள் வலையமைப்பிலும் கேந்திரப் பாடசாலையொன்றைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அதனைச் சூழ ஏனைய பாடசாலைகளை வலையமைப்புக்குட்படுத்தல்.

5.0 அனைத்துப் பாடசாலைகள் தொடர்பிலும் தனியான பாடசாலைக் கோவையொன்றைப் (school profile) பேணல் வேண்டும். அக்கோவையில் இப்பாடசாலையைத் தேர்ந்தெடுத்தமை தொடர்பிலான நியாயநிலையிறுத்த அறிக்கைகளோடு உரிய தரவுகள் மற்றும் தகவல்கள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

6.0 அவ் ஒவ்வொரு மாகாணங்களாலும் பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் அதற்குரியதான கட்டமைப்பு முன்மொழிவுகளுடன் கூடியதான, படிவம் 5 இற்கமைய அறிக்கையொன்றை கல்வி அமைச்சிடம் சமர்பித்தல் வேண்டும்.

7.0 இவ்வேலைத்திட்டம் தொடர்பில் ஏதேனும் கொள்கைசார் சிக்கலொன்று இருப்பின் அது தொடர்பிலான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் கல்விச் செயலாளரைச் சாரும்.

என்.எச்.எம். சித்ராநந்த
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்:

1. செயலாளர், நிதி அமைச்சு
2. தலைவர், நிதி ஆணைக்குழு
3. கணக்காய்வாளர் நாயகம்
4. அனைத்து மாகாணப் பிரதம செயலாளர்கள்
5. அனைத்து மேலதிகச் செயலாளர்கள், கல்வி அமைச்சு
6. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
7. ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
8. ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
9. பணிப்பாளர் நாயகம் (நிதி), கல்வி அமைச்சு
10. பிரதான நிதி அதிகாரி, கல்வி அமைச்சு
11. அனைத்துக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சு
12. கல்விப் பணிப்பாளர் (தேசிய பாடசாலைகள்), கல்வி அமைச்சு
13. கல்விப் பணிப்பாளர (கொள்கை மற்றும் திட்டமிடல்), கல்வி அமைச்சு
14. உள்ளகக் கணக்காய்வாளர், கல்வி அமைச்சு

**Format No.1:** **Student flow by student information (need to fill according to separate grades)**

| Name of the student | GramaNiladari Division | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | A | B | C | D | E | F | G.. | Other |
| 1 | | | | | | | | |
| 2 | | | | | | | | |
| 3 | | | | | | | | |
| . | | | | | | | | |
| . | | | | | | | | |
| 12 | | | | | | | | |
| 13 | | | | | | | | |
| Total | | | | | | | | |

**Format No.2:** **Student flow by grades**

| Grade | No. of students by GramaNiladari Division | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | A | B | C | D | E | F | G.. | Other |
| 1 | | | | | | | | |
| 2 | | | | | | | | |
| 3 | | | | | | | | |
| . | | | | | | | | |
| . | | | | | | | | |
| 12 | | | | | | | | |
| 13 | | | | | | | | |
| Total | | | | | | | | |

**Format No. 3a:** **Student flow by schools (summary by GN division)**

| School | No. of students by GramaNiladari Division | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | A | B | C | D | E | F | G.. | Other |
| 1 | | | | | | | | |
| 2 | | | | | | | | |
| 3 | | | | | | | | |
| . | | | | | | | | |
| . | | | | | | | | |
| 12 | | | | | | | | |
| 13 | | | | | | | | |
| Total | | | | | | | | |

**Format No. 3b:** **Student flow by GN division (example)**

| School | No. of students by GramaNiladari Division | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | A | B | C | D | E | F | G | H | I | J | K | Other |
| L | **15** | **9** | **8** | **4** | **2** | 2 | 1 | 3 | -- | -- | -- | 02 |
| M | **7** | **10** | **6** | **5** | **--** | -- | 3 | 2 | 1 | -- | -- | 06 |
| N | **16** | **25** | **18** | **20** | **4** | 6 | 2 | 1 | -- | -- | -- | 03 |
| O | **8** | **10** | **25** | **30** | **10** | 2 | 4 | 1 | -- | 3 | 2 | 06 |
| P | **2** | **4** | **17** | **25** | **30** | 4 | 5 | 3 | 2 | -- | 1 | 07 |
| Q | 2 | 1 | 5 | 1 | 5 | **2** | **19** | **20** | **21** | **17** | **18** | 06 |
| R | -- | -- | 4 | 2 | 3 | **6** | **10** | **12** | **14** | **16** | **06** | 03 |
| S | 3 | 6 | 2 | 1 | 5 | **7** | **17** | **18** | **20** | **06** | **07** | 01 |
| T | -- | -- | 6 | 7 | 8 | **11** | **15** | **16** | **12** | **03** | **04** | 02 |
| U | 1 | 2 | 4 | 3 | 3 | **6** | **14** | **11** | **18** | **20** | **06** | 01 |

**Format No.4:** **Student flow by school by grade**

| Schools of a selected Group | | No. of students by GramaNiladari Division | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| School | Cycle | A | B | C | D | E | F | G | Other |
| L | Gr 1-5 | | | | | | | | |
| | Gr 6-11 | | | | | | | | |
| | Gr 12-13 | | | | | | | | |
| M | Gr 1-5 | | | | | | | | |
| | Gr 6-11 | | | | | | | | |
| | Gr 12-13 | | | | | | | | |
| N | Gr 1-5 | | | | | | | | |
| | Gr 6-11 | | | | | | | | |
| | Gr 12-13 | | | | | | | | |
| . | Gr 1-5 | | | | | | | | |
| | Gr 6-11 | | | | | | | | |
| | Gr 12-13 | | | | | | | | |
| . | Gr 1-5 | | | | | | | | |
| | Gr 6-11 | | | | | | | | |
| | Gr 12-13 | | | | | | | | |
| . | Gr 1-5 | | | | | | | | |
| | Gr 6-11 | | | | | | | | |
| | Gr 12-13 | | | | | | | | |
| U | Gr 1-5 | | | | | | | | |
| | Gr 6-11 | | | | | | | | |
| | Gr 12-13 | | | | | | | | |

## Format No.5: Format for submission of school list with structure proposals

**Province :**

**Zone :**

| SN | Proposed school network | SN | Core school of the school network | SN | Other schools/ feeder schools linked to the core school of the network | Present status | | | | | | | Proposed structure | | | | | | | Special remarks | Justification |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | No. of students | | | No. of teachers | | | Grade span | No. of students | | | No. of teachers | | | Proposed GCE AL stream | | |
| | | | | | | M | F | T | M | F | T | | M | F | T | M | F | T | | | |
| 1 | | 1 | | 1 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 2 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 3 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 4 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 5 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 6 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 7 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 8 | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | 2 | | 1 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 2 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 3 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 4 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 5 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 6 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 7 | | | | | | | | | | | | | | | | | |
| | | | | 8 | | | | | | | | | | | | | | | | | |

I hereby certify the above information and data is true and correct.

Signature:……………………………………
Name :………………………………………..
Designation: Provincial Director of Education (………………… Province)
Date:……………2020